**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236183

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.01.2023

Accepted: 20.02.2023

Published: 01.04.2023

Citation:
Luxmykanthan, Gowry. "Role of Brahmins in Society of Eastern Province, Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 4, 2023, pp. 27–36.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6183

*Corresponding Author:
gowryl@esn.ac.lk

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Role of Brahmins in Society of Eastern Province, Sri Lanka

**Gowry Luxmykanthan**
*Senior Lecturer, Department of History*
*Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0004-0362-4529*

**Abstract**

There is evidence of the existence of various social groups such as Naga, Baratas, Kabojha, Tamils, and Brahmins etc. In Eastern Sri Lanka from the third century BC onwards. Although the existence of Brahmins is observed here, it must explore whether they were found at a high level in the varna system like in Indian society. The objective of this study is to find out the history of Brahmins in the Eastern province and to reveal their role in history from ancient times to colonial period. This research uses the Historical and Descriptive methodology. Brahmi inscriptions, Mahavamsa, Deepavamsa (Pali literature), Tamil inscriptions and oral stories have been used as primary sources for this study. Based on the findings there is corroborating evidence of the continuous presence of Brahmins in Eastern Sri Lanka from the third century BC to the colonial period. As the Brahmins excelled in education, they held an influential place in the religious and other political spheres. Influences of Brahmin may have increased slightly during the rule of Cholas due to receiving land grants (chaturvedimangalam). During the medieval history of eastern Ceylon, they have power in irrigation works, and temple practices as authorities called 'Urchapaiyar'. Although the Brahmins were influential in Eastern Sri Lanka, it is noteworthy that they were not regarded as superior to other communities such as the North Indian Varna classification

**Key Words:** Brahmin, Chaturvedimangalam, Existence, Authority, Influence, Varna system

**References**

1. Bimala Churn Law (E.d). 1970. *Dipavamsa*, The Ceylon Historical Journal, Vol-III. No.1-4, Colombo.
2. Ellawalla, H. 1969. *Social History of Early Ceylon*, Colombo.
3. Paranavitana, S. 1970, *Inscriptions of Ceylon: Early Brahmi Inscriptions*, The Department Of Archaeology Ceylon, Colombo.
4. Wilhelm Geiger (E.d). 1986. *The Mahavamsa*, Asian Educational Services, New Delhi, Madras.

# கிழக்கிலங்கைச் சமுதாயத்தில் பிராமணர்களின் வகிபங்கு

***கௌரி லக்சுமிகாந்தன்***
*சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை*
*கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**
*கிழக்கிலங்கையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக நாகர், பரதவர், காபோஜர், தமிழர், பிராமணர் "முதலான பல்வேறு சமூகப் பிரிவினர் வாழ்ந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. பிராமணர்களின் இருப்பை அவதானிக்கின்றபோதிலும் இந்திய சமூகத்தைப் போன்று வர்ண வேறுபாட்டில் முக்கியத்து வமுடையோராகக் காணப்பட்டனரா என்பது ஆய்விற்குரியதாகும். கிழக்கிலங்கை வரலாற்றில் பிராமணர்களின் வரலாற்றை கண்டறிவதுடன், வரலாற்றில் அவர்களது வகிபாகம் எத்தகையது என்பதை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இந்திய சமுதாயத்தில் உயர் பிரிவினராகக் கருதப்பட்ட பிராமணர்கள்", கிழக்கிலங்கை வரலாற்றில் எத்தகைய வகிபங்கைப் பெற்றிருந்தனர் என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. பிராமிக் கல்வெட்டுக்கள், இலங்கைப் பாளி இலக்கியங்கள், தமிழ்க் கல்வெட்டுக்கள், வாய்மொழிக் கதைகள் ஆகியவை முதலாம் தர சான்றுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. கிழக்கிலங்கையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக ஐரோப்பியர் காலம் வரை பிராமணர்களின் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்தத்தக்க சான்றுகள் காணப்படுகின்றன. பிராமணர்கள் கல்வி வேள்விகளில் மேன்மை பெற்று விளங்கியதால் இங்கு சமயத் துறையிலும்", பிற அரசியல் துறைகளிலும் ஒரு செல்வாக்கான இடத்தினை வகிக்கத் தொடங்கியுள்ளனர்.*

***திறவுச்சொற்கள்:*** *வரலாறு பிராமணர்கள், சதுர்வேதிமங்கலம், இருப்பு, அதிகாரம், செல்வாக்கு, வர்ண அமைப்பு*

## அறிமுகம்

பண்டைய இந்தியாவில் நிலவிய நால் வருண முறை அல்லது நான்கு சமூகப் பிரிவுகளில் ஒன்றைச் சேர்ந்தோரைக் குறிப்பதாகவே பிராமணர் அல்லது பார்ப்பனர் என்ற பெயர் காணப் படுகின்றது. இவர்கள் வேதங்களையும் ஆகமங்களையும் இதிகாசங்கள், புராணங்கள் முதலியவற்றையும் உலகியல் சார்ந்த இலக்கியங்களையும் கற்பவர்களும் கற்பிப்பவர்களுமாக வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர். இந்தியத் தொடர்பால் வேத நெறிக் கலாசாரத்தின் செல்வாக்கு இலங்கையில்" ஏற்பட்டதால் இங்கும் பிராமணர் முக்கிய பங்கினை வகிக்கத் தொடங்கினர்.

கிழக்கிலங்கையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டளவில் நாகர், பரதவர், காபோஜர், தமிழர் முதலான பல்வேறு சமூகப் பிரிவினர் வாழ்ந்தமைக்கான சான்றுகளைப் பிராமிக் கல்வெட்டுக்கள் தருகின்றன. இவற்றுடன் பிராமணர்கள் பற்றிய குறிப்புக்களையும் இச்சான்றுகளூடாக அறியமுடிகின்றது. ஈழத்துச் சமுதாயத்தில் பிராமணர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத் தினைத் தமிழகத்துச் சங்க இலக்கியங்கள் போன்று இலங்கைப் பாளி நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன. பிராமிக் கல்வெட்டுக்கள் பௌத்தச் சமயத்திற்குப் பிராமணர்களால் அளிக்கப்பட்ட குகைத் தானங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

### ஆய்வுப் பிரச்சினை

கிழக்கிலங்கை வரலாற்றில் புராதன காலம் முதலாக பல்லின சமூகங்களின் இருப்பை வெளிப்படுத்தத்தக்க சான்றுகள் காணப்படுகின்றச் போதிலும், உயர் வர்க்கம், கீழ் வர்க்கம் என்கின்ற வகுப்பு வேறுபாடுகள் காணப்பட்டமைக்கு எவ்வித ஆதாரங்களும் காணப்படவில்லை. குறிப்பாகப் பிராமணர்கள் இந்தியச் சமுதாயத்தில் உயர் பிரிவினராகக் கருதப்பட்டனர். அந்த வரிசையில் கிழக்கிலங்கை வரலாற்றில் பிராமணர்களின் வகிபங்கு எத்தகையது என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### ஆய்வு முறையியல்

வரலாற்றியலில் புராதன காலம் முதல் தற்காலம் வரை பிராமணர்கள் தொடர்பான கருத்துக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதால் இதுவொரு வரலாற்றியல் அடிப்படையிலான விபரண ஆய்வாக அமைகின்றது. கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை புழக்கத்திலிருந்த பிராமிக் கல்வெட்டுக்கள், இடைக்காலத்திற்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள், மகாவம்சம், தீபவம்சம் உள்ளிட்ட பாளி இலக்கியங்கள், ஒல்லாந்தர் காலத்தில் தொகுக்கப்பட்ட தமிழ் இலக்கியமான மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், பிராமணர்களுடன் தொடர்புடைய வாய்மொழிக் கதைகள் ஆகியவை முதல் நிலைத்தரவுகளாகக் காணப்படுகின்றன. ஆய்வோடு தொடர்புபட்ட ஏனைய வரலாற்று ஆய்வாளரின் கருத்துக்கள் அடங்கிய நூல்கள், கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகக் காணப்படுகின்றன.

### இலங்கை வரலாற்றில் பிராமணர்கள்

பாளி இலக்கியங்களை உற்றுநோக்கும் போது பிராமண குலத்தவர் அக்கால அரசியலில் ஒரு பிரதான இடத்தினை வகித்திருந்தமை புலனாகின்றது. அரசனுக்குச் செய்யப்படும் பட்டாபிஷேகம் தேவநம்பிய தீஸன் காலம் முதலாக ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. ஆசிரியர்களாகவும், சோதிடர்களாகவும், மருத்துவர்களாகவும் இவர்கள் தேர்ச்சி பெற்றிருந்ததை ஈழத்து இலக்கிய, கல்வெட்டாதாரங்கள் எடுத்தியம்புகின்றன.

விஜயன் பற்றிய ஐதிகத்தில் உபதிஸ்ஸ என்ற பிராமணன் அநுராதபுரத்தின் வடக்கே "உபதிஸ்ஸகம" எனும் குடியேற்றத்தை அமைத்தமை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது (M.V.VII:44). அதே போன்று விஜயன் வாரிசு இன்றி இறந்த போது முறையான வாரிசான பண்டுவாசதேவ இந்தியாவிலிருந்து வந்து அரசபதவியை ஏற்கும் வரை ஒரு வருட காலம் மன்னனில்லாத நிலையில் அரசியலை நடத்துமளவுக்கு உபதிஸகமவில் இருந்த மந்திரிகள் (பிராமணர்கள்) செல்வாக்கு பெற்றிருந்ததாக மகாவம்சம் குறிக்கின்றது (M.V.VIII:4-5). இதே நூலில் உபதிஸ்ஸவிற்கு பின்னர் மந்திரங்களை உச்சரிப்பதில் வல்லுனர்களான பிராமணர்கள் பற்றியும், அரண்மனையில் அவர்கள் ஆலோசகர்களாக விளங்கியது பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன (M.V.IX:2).

விஜயனின்பின் அரசு செலுத்தியவர்களில் பண்டுகாபயன் பிரதானமானவனாவான். இம்மன்னன் இளமையிலே அரச வித்தைகளிற் தேர்ச்சி பெறுவதற்காக இவனின் தாயான "உம்மாத சித்ரா" என்பவள் பிராமணனான பண்டுலவிடம் இவனை அனுப்பியதாக மகாவம்சம் கூறுகின்றது. அரசனுக்குரிய வித்தைகளில் இவனைப் பயிற்றுவித்த பண்டுல பண்டுகாபயனுக்கு மாமன்மாரிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொடுப்பதற்காக ஒரு பெரும் படையைத் திரட்ட ஒரு இலட்சம் நாணயங்களை அளித்தான் (M.V.X:19-23). பிற்காலத்தில் இவன் மன்னனாகிய போது பண்டுலவின் மகனாகிய "சண்ட" என்பவனைத் தனது புரோகிதனாக நியமித்தான் (M.V.X:79).

அத்துடன் இம்மன்னன் பிராமணர் வாழ்வதற்கெனத்தனியான குடியிருப்புக்களையும்,

அவர்களின் வழிபாட்டிற்குரிய யாகசாலைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தான் (M.V.X:102). அநுராதபுர தலைநகரில் அமைக்கப்பட்ட பிராமணக் குடியிருப்புக்களைப் பாளிநூல்கள் "பிராமணாவத்த" என அழைக்கின்றன.

பண்டுகாபய மன்னனின் காலத்தில் அமைக்கப்பட்ட "சிவிகாசாலா", "சொத்திசாலா" ஆகிய கட்டிடங்கள் பற்றி மகாவம்சத்தில் குறிப்புள்ளது (M.V.X:102). இதன் உரைநூலாகிய வம்சத்தப் பிரகாசினி சொத்திசாலா என்ற பதத்திற்கு இரு விளக்கங்களை தந்துள்ளது. ஒன்று பிராமணர்கள் இருந்து மந்திரம் உச்சரிக்கும் இடம் அல்லது வைத்தியசாலை என்பதாகும். இவ்வாறே "சிவிகாசாலா" என்ற பதத்திற்கும் சிவலிங்கத்தை கொண்டுள்ள வீடு அல்லது வைத்தியசாலை என்பது அதன் விளக்கமாகும். இவை சமயக் கட்டடங்களோடு இணைத்துக் கூறப்படுவதால் வைத்தியசாலை என்ற விளக்கத்திலும் பார்க்க முறையே" பிராமணர் இருந்து மந்திரம் உச்சரிக்குமிடம்", "சிவலிங்கத்தினைக் கொண்டுள்ள வீடு" ஆகிய விளக்கங்களே பொருத்தமானது என பரணவித்தான கருதுவது ஏற்கத்தக்கது (Paranavitana 1929).

தேவநம்பியதீசன் அசோகனுக்கு அனுப்பிய தூதுக்குழுவில் இம்மன்னனின் புரோகிதன் (துவஜ) இருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது (M.V.XI:20-26). பௌத்தமதத்தின் புனிதச் சின்னமாகிய அரசமரக்கிளை ஈழத்திற்கு அனுப்பப்பட்ட நிகழ்ச்சியின் போது அதனுடன் சம்பந்தப்பட்ட கிரியைகளை நடாத்து வதற்கு எட்டுப் பிராமணக் குலங்களும் அங்கு சென்றது பற்றிச் சாரத்ததீபனி என்ற நூல் குறிப்பிடுகின்றது (Ellawala1969:31). பின்னர் ஈழத்தின் எட்டு இடங்களில் இம்மரத்தின் கிளைகள் நாட்டப்பட்டதாக மகாவம்சம் மேலும் தெரிவிக்கின்றது (M.V.XIX:60-63). இவை ஒரு சமயம் இவ்வெட்டுப் பிராமண குலங்கள் வாழ்ந்த இடங்களாக விளங்கியிருக்கலாம் (சிற்றம்பலம் 1996:274-275).

யாழ்ப்பாணத்திலுள்ள ஜம்புகோளத் துறைமுகத்திலிருந்து அரசமரக்கிளை அநுராதபுரத்தை நோக்கி ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட போது வழியில் இது நிறுத்தி வைக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகப் பிராமணன் "திவக்கவின் கிராமம்" குறிப்பிடப்பட்டுள்ளது (M.V.XIX:37). இப்பிராமணன் இக்காலத்தில் சிற்றரசர்கள் போன்று செல்வாக்குள்ள நிலையிற் காணப்பட்டதையே இது வெளிப்படுத்துகின்றது. உரோகணைப் பகுதி சிற்றரசர்களாகிய கஜரகாம, சந்தனகாமச் சத்திரியர்கள் அரசமரக்கிளை நாட்டும் வைபவத்திற்கு அழைக்கப்பட்ட போது இப்பிராமணனும் அழைக்கப்பட்டமை இவ்வாறு ஊகிக்க வைக்கின்றது (M.V.XIX:53-56).

காக்கவண்ணதீஸ, துட்டகைமுனு, வட்டகாமிணி போன்ற மன்னர்களின் காலத்திலும் பிராமணர் பெற்றிருந்த முக்கியத்துவத்தினைப் பாளி நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. அத்துடன் மிகிந்தலைக்கு அருகிலுள்ள துவார மண்டலத்தில் வாழ்ந்த "குண்டலி" என்ற பிராமணன் காக்கவண்ண தீஸன், துட்டகைமுனு ஆகியோரின் நண்பனாக மகாவம்சத்திற் குறிப்பிடப்பட்டுள்ளான் (M.V.XXII:24-26). பிராமணனாகிய இவன் அக்காலத்தில் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. சோரநாக என்ற மன்னனின் (கி.மு. 63-51) மனைவியாகிய அனுலாதேவி அரண்மனைப் புரோகிதனாக விளங்கிய தமிழ்ப் பிராமணனாகிய நீலவுடன் கொண்ட காதலால் அவனை மன்னனாக்கினாள் (M.V.XXXIV:2426).

இராசவாகினியில் துட்டகைமுனு மன்னனின் காலத்தில் பிராமணர் உயர் சாதியினராக மதிக்கப்பட்டாலும் கூட, சமூகத்தில் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்ட சண்டாளர்கள் ஒதுக்கப்படவில்லை என்பதனை எடுத்துக் கூறும் கதைகள் உள்ளன (Ellawala 1969:169). ஆயினும் இதே நூலில் துட்டகை முனு

மன்னனின் மகனது திருமண வைபவத்திற்குரிய கிரியைகளைப் பிராமணக் குருமாரே முன்னின்று நடாத்தி வைத்தனர் எனவும் கூறப்படுகின்றது.

பிராமிக் கல்வெட்டுக்கள் பிராமணர்களைப் பற்றியும், அவர்களது கோத்திரங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இத்தயை கோத்திரங்கள் ஈழத்தில் காணப்பட்டதை நோக்கும் போது இக்காலத்தில் பிராமணரின் சமய நடவடிக்கைகள் ஓரளவு வியாபித்திருந்தமை தெரிகின்றது. இலங்கை முழுவதுமாக முப்பத்து மூன்று பிராமிக் கல்வெட்டுகளில் பிராமணரைப் பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. ஏனையவற்றில் பிராமண ரிஷிகளின் பெயர்களும், கோத்திரங்களின் பெயர்களுமே ஜசுங்க, கொஸிக (கௌஸிக), பௌதிமாஸ, கொபுதி (கௌபூதி), அட்டக (அஷ்டக), வஹிடி (வசிட்ட)ஸ உள்ளன. இத்தகைய கோத்திரங்கள் பல சமகாலத்தில் தமிழகத்திற் காணப்பட்டதைச் சங்க நூல்கள் எடுத்தியம்புகின்றன.

### புராதன கிழக்கிலங்கையில் பிராமணர்கள்

பிராமிக் கல்வெட்டுக்கள்: கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட 1500க்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கையின் பல பாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பௌத்த குருமாருக்கு அல்லது சங்கத்தாருக்கு தானமளித்தவர் பெயரோடு அவரது வம்சம், பட்டம், பதவி, தொழில், மதம், இனம் போன்ற தரவுகளும், அவர்கள் வாழ்ந்த இடம்,ஊர், நாடு போன்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கோன்கலவிலுள்ள பிராமிக் கல்வெட்டில் "பமண" என்ற குறிப்பு வருகின்றது (I.C.1970.No.545) (படம் -01).

"பமண அதிமதகஹ லெணே" - பிராமணன் அதிமதக என்பவனால் வழங்கப்பட்ட குகைத்தானமாகும்.

பமண என்பது பிராமணர்களைக் குறிக்கின்ற பிராகிருதச் சொல்லாகும். "அதிமதக" என்பது பிராமண கோத்திரங்களில் ஒன்றான ஐத்திரேய கோத்திரத்தினைக் குறிக்கின்றது (அத்ரேய மத்ர்க-எமவ). சதபத பிராமணத்தில் இப்பெயர் குறிப்பிடப்படுகின்றது.

இம்மாவட்டத்திலுள்ள களியோடை எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் (ஐ.ஊ.1970.மே. 486) "கொதம நம சமணெ" என்ற வாசகம் காணப்படுகின்றது. இதன் பொருள் கௌதம கோத்திரத்தினைச் சேர்ந்த பௌத்த பிக்கு என்பதாகும். கோத்திரம் என்பது இவர்கள் எந்த முனிவருடைய வழியில் வந்தவர்கள் என்பதைக் குறிப்பதாகும். பிராமணர்கள் எல்லோருமே ரிஷி பரம்பரையினர் என்று கூறப்படுவதால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கோத்திரம் உண்டு. கல்வெட்டுக்களினூடாக இவர்கள் தொடர்பான மேலதிக விடயங்களை அறிய முடியாதுள்ளது. எனினும் கல்வெட்டுக்களினுடைய காலத்தைக் கொண்டு கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக கிழக்கிலங்கையில் பிராமணர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதுவும் அவர்களில் சிலர் பௌத்த சமய ஆதரவாளராக மாறியுள்ளமையும் நிருபிக்கப்படுகின்றது.

தென்னிந்தியாவில் சோழர் காலக் கல்வெட்டுக்களில் பரத்வாஜ கோத்திரம், வசிஸ்டக் கோத்திரம், காசியப கோத்திரம், ஆத்திரேயக் கோத்திரம், கௌதமக் கோத்திரம் பற்றிய குறிப்புகள் உள்ளன (கயல்விழி 2020:57-67).

இத்தானங்களை அளித்த சகல பிராமணரும் பௌத்தர்களாக மதம் மாறியிருத்தல் வேண்டும் என எண்ண முடியாது. சமயப்பொறை நிலவிய அக்காலத்தில் தமது பழைய அனுஷ்டான முறைகளைப் பின்பற்றிக்கொண்டே இவ்வாறு

பௌத்த மதத்திற்குச் சிலர் தானத்தை வழங்கியிருக்கக் கூடும். அத்துடன் இக்குகைத் தானங்கள் பௌத்தத்தை ஆதரித்த பிராமண குலத்தவரை மட்டுமே குறிப்பிடுகின்றன. எனினும், பௌத்த மதத்தினை ஆதரிக்காது, குகைத் தானங்களை அளிக்காது, தமது பாரம்பரிய சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டிருந்த பிராமண குலத்தவர் பலரும் இருந்திருக்கலாம். துரதிஷ்டவசமாக அவர்களைப் பற்றிய தடயங்கள் நமக்குக் கிடைக்கவில்லை (சிற்றம்பலம் 1996:269-270). அதேவேளை இலங்கையின் ஏனைய பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுக்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது அரசர்களின் ஆலோசகர்களாகவும் வைத்தியவர்களாகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ஐஊ.1017 ழே:1059, 1060).

## இலக்கியச் சான்றுகள்

கிழக்கிலங்கையில் இருந்த பிராமணியக் கடவுளரின் (Temples of Brahmanical Gods) ஆலயங்களை இடித்தே மகாசேனன் காலத்தில் பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXXVII:40). இடித்தழித்த இந்துக் கோயில்களில் ஒன்று கோகர்ண எனுமிடத்திலிருந்த சிவலிங்கக் கோயிலாகும். மற்றைய இரண்டும் உரோகணவில் அமைந்திருந்தன. கிழக்கிலங்கையானது அனுராதபுர இராசதானிக் காலத்தில் உரோகண இராச்சியத்துடன் இணைந்திருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. ஏராகாவில எனும் ஊரும் பிராமணன் கலந்தனின் ஊரும் இவ் இந்துக் கோயில்கள் இருந்த இடங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. பிராமணரின் பெயரைக் குறிப்பிட்டு இவ்வூர் அடையாளப்படுத்தப் பட்டமையானது புராதனச் சமூகத்தில் பிராமணர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

உரோகணைப் பிரதேசத்தில் காக்கவண்ண தீசனின் பிராமண புரோகிதனின் மகள் பிக்குணி சாசனத்திற் சேர்ந்ததாகத் தீபவம்சம் கூறுகின்றது (D.V.XVII:20-22). பிராமணர்களது நடவடிக்கைகள் அரசியல் ரீதியிலும் காணப்பட்டதை வட்ட காமிணியின் ஆட்சிக் காலச்செய்திகள் உணர்த்துகின்றன. இவன் அனுராதபுரத்தில் மன்னனாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஐந்து மாதங்கள் கழிய முன்னர் (கி.மு 103) உரோகணையில் இருந்த திஸ என்ற பிராமணன் இவனது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதாக மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXXIII:37-40). உரோகணைப் பிரதேசத்தில் கிளர்ச்சியை நடாத்துமளவுக்கு இராணுவ ரீதியாக இப்பிராமணன் வலிமை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புத் தேசத்தில் பிராமணர்களின் குடியிருப்புகள் பற்றிய தகவல்களை மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலும் காணமுடிகின்றது. விஜயன் இலங்கைக்கு வந்தமை பற்றிய ஐதிகக்கதையை கூறுமிடத்து, இயக்க அரச குலத்தை அழித்து ஆட்சியை கைப்பற்றியக் பின்னர் அவருக்கு அந்தணர்கள் மணிமுடி தரிக்கச் செய்தனர் என இந்நூல் மேல்வருமாறு கூறுகின்றது.

“அரசுகள் புரிய அந்தணர் தங்களை வரிசையாய் இருத்தி மணிமுடி தரித்து சிங்கத் துவீபமெனத் திருநாமம் இட்டு” என வருகின்றது.

பிராமணர்கள் கிழக்குப் பகுதிகளுக்கு பண்டைய கலிங்கத்தின் சிறிசைலஜம் -மல்லிகார்ச்சுனம் போன்ற இடங்களிலிருந்து வந்தவர்களாவர் (கோபால் 2005: 145-148). கலியாண்டு 3110இல்(கி.பி9)மட்டக்களப்பைபிரசன்ன சித்து மன்னன், புவநேகபாகு என்பவனின் உதவியோடு நாகர்முனை சுப்பிரமணிய சுவாமி கோயிலை சோழர்களைக் கொண்டு செப்பனிட்டான். புவநேகபாகு அந்தணரைக் கொண்டு பத்ததியின் படி அபிஷேகம் செய்வித்தான் (பிரசன்னசித்து சரித்திரம்.15-17).

இவர்களது சந்ததியர் பின்னர் குமுக்கன் கரையிலும், கருங்கொடித்தீவு தில்லை நதிக்கரையிலும் குடியிருந்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் இம்மக்கள் திருக்கோவில் தம்பிலுவில், அக்கரைப்பற்று, பனங்காடு போன்ற இடங்களில் வாழத் தொடங்கினர் (மனுநேயகயபாகு சரித்திரம்.17-19).

மட்டக்களப்புச் சமூகத்தில் காணப்படுகின்ற குலங்களுக்கான குலவிருதுகளில் "வேதியருக்கு பூணூல்" என இந்நூலில் கூறப்படுகின்றது. அதேபோன்று சாதித் தெய்வக் கல்வெட்டில் "மறையோர்க்கு நான்முகனே" எனப் பிராமணர்களின் கடவுளாகப் பிரமன் குறிப்பிடப்படுகின்றான் (குலவிருதுக் கல்வெட்டு, சாதித்தெய்வக் கல்வெட்டு, 77). எந்தெந்த கடவுளர்க்கு எவர் பூசை செய்ய வேண்டுமென்பது பற்றிக் கூறுகின்ற விடத்து பிரமனுக்குப் பிராமணனே பூசகனென பாண்டிய மன்னன் கலிபிறந்து நாலாயிரத்து இருநூறாம் வருடம் வகுத்தான் எனக் கூறுப்படுகின்றது (கி.பி 1099). அக்கரைப் பற்று (கருங்கொடித்தீவு) சித்தி விநாயகர் ஆலய தலபுராணத்தில் கலிபிறந்து 2840 (கி.மு 260) கலிங்கருடன் இவர்கள் வந்ததாகக் குறிப்பிடப்படுவதுடன், பூர்வ சரித்திரத்தில் கி.பி முதலாம் நூற்றாண்டில் திருக்கோயில் ஆலயத்துக்காகக் கொண்டுவரப்பட்டு தம்பட்டையில் கால்பதித்த பரத்துவாச வம்சம், அத்திரி வம்சம், காசிப வம்சம் ஆகிய கோத்திரங்களின் வழிவந்த நான்கு பட்டர் குடும்பங்களைப் பற்றியும் கூறப்படுகின்றது.

பிராமணருக்கே பெருமளவுக்குச் சொந்தமாக விளங்கிய ஆசிரியத் தொழிலைப் பௌத்தத்தின் வருகையோடு பௌத்த குருமார் வகிக்கத் தொடங்கியதால் பிராமணரின் முக்கியத்துவம் நாளடைவில் குறையத் தொடங்கியிருக்கலாம். எனினும் சமய, அரசியற் துறைகளில் பிராமணர்கள் செல்வாக்குள்ள பிரிவினராக புராதன காலத்தில் கிழக்கிலங்கையில் விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்தியகாலத்தில் பிராமணர்கள் தமிழ்க் கல்வெட்டுக்கள்

சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த போது (கி.பி 997-1070) ஏராளமான தானங்களை வழங்கியமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. தென்னிந்தியச் சோழ தேசத்தில் பிராமணர்களுக்கும் (பிரம்மதேயம்), கோயில்களுக்கும் (தேவதானம்) பௌத்தப் பள்ளிகளுக்கும் (பள்ளிச் சந்தம்) நிலதானம் வழங்கியது போன்று ஈழத்திலும் தானங்களை வழங்கினர்.

ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்திலிருந்த ஒன்பது வளநாடுகளில் இராஜேந்திர சோழ வளநாடு தற்காலத்தைய திருகோணமலை நகர் மற்றும் கந்தளாய்ப் பகுதியில் அமைந்திருந்தது. சோழ இலங்கேஸ்வரனது (கி.பி 1023) பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி 1033) எழுதப்பட்ட கல்வெட்டொன்றில் ராஜேந்திர சோழ வளநாடான ராஜவிச்சாதிர வளநாட்டின் ஒரு பிரிவில் அமைந்திருந்த கந்தளாயில் ராஜ ராஜ சதுர்வேதிமங்கலம் அமைந்திருந்தமை பற்றியக் குறிப்புக் காணப்படுகின்றது(படம்-02). பிரம்மதேய ஊர்ச் சபையாரால் கந்தளாய்க் குளத்துடன் தொடர்புடைய விக்கிரம சோழ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்பன தொடர்பிலும் அவற்றின் மூலம் பாசனம் பெறும் வயல் நிலங்களுக்கான வரிதொடர்பாகவும் செய்யப்பட்ட ஏற்பாடொன்றைப் பற்றியதாக அமைகின்றது (பத்மநாதன் 2006:86-101). இத்தகவல் மூலமாக சோழ இலங்கேஸ்வரன் காலத்தில் கந்தளாய்க்குளத்தில் வாய்க்கால் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தினை ஊர்ப் பெருங்குறி மக்கள் கொண்டிருந்தனர் எனலாம்.

பொலநறுவை அரசன் முதலாம் விஜயவாகுவின் (கி.பி 1055-1110) காலத்தில் கந்தளாய்ப் பிரம்மதேயத்தின் பெயரை விஜயராஜ சதுர்வேதிமங்கலம் எனவும் அங்குள்ள

சிவாலயத்தின் பெயரை விஜயராஜ ஈஸ்வரம் எனவும் மாற்றிவிட்டார்கள். இக்கோயிலின் பாகங்கள் பல கண்டறியப்பட்டுள்ளன (படம்-03). விஜயவாகு தேவரின் 42ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற இப்பளமோட்டைச் சாசனம் நங்கை சானி என்னும் விதவையான பிராமணப் பெண், இறந்துபோன தனது கணவனாகிய யக்ஞீய கிரமவித்தன் பேரிற் செய்த அறக்கட்டளை பற்றியதாகும் (படம்-04). கந்தளாயான விஜயராஜ சதுர்வேதி மங்கலத்துச் சிவாலயமான விஜயராஜ ஈஸ்வரத்துக்கு அவள் குறிப்பிடத்தக்க அளவிலான பொன்னைத் தானமாகக் கொடுத்தாள். அவள் செய்த அறக்கட்டளையினை நிறைவேற்றும் பொறுப்பு விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேலைக்காரன் என்னும் படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சாசனத்தை பிரம்மதேயத்துச் சபையார் சிலாலேகஞ் செய்தனர் போலத் தெரிகின்றது. ஆறு களஞ்சு பொன்முடி, சந்தி விளக்கு ஒன்றினை எரிப்பதற்கென்று ஒரு காசு, பொலி முதல் கொண்டு நந்தவனம் வைத்திருப்பதற்கென்று (8) எட்டுக்காசு போன்ற பலவற்றுக்கு காசு தானமளிக்கப்பட்டது (மேலது 2006: 131 -142).

அதேபோன்று விஜயபாகுவின் பேரனான கஜபாகுவின் காலத்திலும் கந்தளாய்ப் பிரம்மதேயம் நிலைபெற்றிருந்தமைக்குச் சான்றுள்ளது. இச்சாசனம் இடையர்கல் என்னுமிடத்தில் ஒரு எல்லைக்கல்லாக நாட்டப் பெற்றது. அரசனின் கட்டளைப்படி பிரம்மதேயத்து எல்லைகள் வரையறை செய்து, ஊரார் எல்லைக்கல் நட்டனர். இங்கு ஊரார் என்பது பிரம்மதேயத்துச் சபையாரைக் குறிப்பிடுகின்றது எனக் கொள்ளலாம். ஆகவே ஏனைய சோழ தேசங்கள் போன்று கந்தளாய்ப் பிரம்மதேயத்திலும் பிராமணர்களால் ஊராட்சி முறை பின்பற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. "ஸ்வஸ்தி ஸ்ரீ லங்கேஸ்வரன் கஜவாகு தேவர் கந்தளாய் பிரம்மதேயம்"

இப்பிரம்மதேயம் பற்றிய இன்னுமொரு சாசனம் கந்தளாய்ச் சிவன் கோயில் வளாகத்தில் உள்ளது. ஒரு சிறிய கற்பலகையில் எட்டு வரிகளில் எழுதப்பட்டுள்ள அச்சாசனம் கந்தளாய்ப் பிரம்மதேயம் விஜயராஜ சதுர்வேதிமங்கலத்துக் கைலாசமான விஜய ராஜேஸ்வரமுடையார் கோயிலுக்கு வழங்கப் பெற்ற தானமொன்றைப் பதிவு செய்கின்றது.

**"ஸ்வஸ்தி ஸ்ரீ கோ அபய**
**சலாமேக பர்ம்மரான சக்ர**
**வத்தி ஸ்ரீஜ ஜயபாகு தேவற்கு யா**
**ண்டு 35ஆவது கந்தளாயாந விஜ**
**யராஜ சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ கை**
**லாசமான விஜயராஜேஸ்வரமுடயார்க்கு.."**

## ஐரோப்பியர் காலத்தில் பிராமணர்கள் வாய்மொழிக் கதைகள்

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் போது (1640-1796) பிராமணர்கள் மட்டக்களப்பு பகுதியில் கோயிற் கடமைகளைச் செய்தமைக்கு, தற்காலத்தில் இப்பிராந்தியங்களில் புழக்கத்தில் உள்ள வாய்மொழிக் கதைகளில் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

நரேந்திரசிங்கனிடம் கவிபாடி பரிசு பெற்ற பிராமணன் கதை (கதை கூறியவர்: திரு.துரையப்பா, இடம்: பனிச்சையடி முன்மாரி)

"திருக்கோயில்ல இருந்த பிராமண குருக்கள் ஓராள் அப்ப கண்டிய ஆண்ட நரேந்திரசிங்க மன்னன்ட பரிசி வாங்க போயிரிக்காரு. அங்க அரச சபைல மன்னன சுத்தி எல்லாரும் கொலுவுல இரிக்கக்க பிராமண குருக்கள் போய் மன்னன ஆசீர்வதித்தாராம். இவர பற்றி விசாரிச்ச அங்க இருந்த திஸாவமார் கேட்டானுகளாம். நீ அரசர பற்றி கவி பாடுவயா? என்டு கேக்க கவிபாட தெரியாத அவரும் சரி என்டு சொல்லித்தாராம். பொறகு என்ன செய்ற என்டு தெரியாம யோசித்து போட்டு முருகப்பெருமான நினச்சித்து வசந்தன் கவிய பாடி பரிசி வாங்கினாராம்."

கண்டி இராச்சியத்தினுடைய வரலாற்றில் இறுதிச் சிங்கள மன்னனான ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கனுடைய காலத்தில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவத்தைக் கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது. இக்காலம் இலங்கையில் ஒல்லாந்தராட்சி நிலவிய காலமாகும். கிழக்கிலங்கையினுடைய கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோதிலும் அதன் உட்பகுதிகள் கண்டி இராச்சியத்தின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டு வன்னிச் சிற்றரசர்களால் ஆளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இக்கதையினூடாக நரேந்திரசிங்கன் காலத்தில் மட்டக்களப்பிற்கும் கண்டி இராச்சியத்திற்குமிடையிலான தொடர்பினையும் மட்டக்களப்பில் பிராமணர்களின் இருப்பையும் அறிய முடிகின்றது. இவர்கள் கல்வியிலும், கவி பாடுவதிலும் புலமை பெற்றோராகவும் காணப்பட்டுள்ளனர்.


## முடிவுரை

பிராமணர்கள் கல்வி வேள்விகளில் மேன்மை பெற்று விளங்கியதால். மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒல்லாந்தர் காலம் வரை கிழக்கிலங்கையின் "சமயத் துறையிலும்", பிற அரசியல் துறைகளிலும் ஒரு செல்வாக்கான இடத்தினை வகிக்கத் தொடங்கினர். எனினும் பௌத்தத்தின் அறிமுகமானது இவர்களால் வடஇந்திய சமூகத்தில் ஆற்றப்பட்ட ஆசிரியப் பணியை இங்கு தொடர முடியாத சூழலை எற்படுத்தியிருந்தது எனக் கணிக்கலாம். கி.மு மூன்றாம் நூற்றாண்டு காலத்தில் இவர்கள் பௌத்தத்தை ஆதரித்துள்ளமைக்கு பிராமிக் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாகும். நீண்ட காலமாக சமயம் மற்றும் அரசியலில் கணிசமானளவு பங்களிப்பை கொண்டிருந்தமையை காணமுடிகின்றது.


இவர்களது செல்வாக்கு சோழராட்சியில் சற்று அதிகரித்திருத்தல் வேண்டும். இக்காலத்தில் நிலமானியங்கள் பெற்றிருந்ததுடன், இவர்களது குடியிருப்புப் பகுதியை அண்டியிருந்த கந்தளாய்க் குளத்தின் நீர்ப்பாசன நடவடிக்கைகள், கோயில்களின் நடைமுறைகள் என்பவற்றில் அதிகாரமிக்கோராகவும் காணப்பட்டிருந்தனர் எனலாம். ஆயினும் பிரம்மதேயங்களுக்கு அப்பால் அவர்கள் எத்தகைய அதிகாரங்களைப் பெற்றிருந்தனர் என்பதை அறியமுடியாதுள்ளது. எனினும் இந்து சமய வழிபாட்டிடங்கள் அதிகளவில் அமைத்து வைதீக முறையை சோழர்கள் முன்னெடுத்தனர். எனவே இந்நடைமுறைகளில் பிராமணர்கள் கணிசமானளவு பங்களிப்புச் செய்திருப்பர் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துமில்லை. இவர்கள் வழங்கிய சேவைகளுக்காகவே நிலமானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே புராதன காலம் முதலாக கிழக்கிலங்கையில் செல்வாக்குமிக்கோராகக் காணப்பட்டனர் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. பிராமணர்கள் கிழக்கிலங்கையில் முக்கியத்துவம் பெற்ற போதிலும், வடஇந்திய வர்ண வேறுபாடு போன்று ஏனைய சமூகங்களைக் காட்டிலும் மிகஉயர்ந்தநிலையில்வைத்து நோக்கப்படவில்லை என்பதும் இச்சமூகத்தில் வர்ண வேறுபாடு பின்பற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## துணைநூற்பட்டியல்

1. கமலநாதன்.சா.இ. 2005. மட்டக்களப்பு *பூர்வ சரித்திரம்*, கமலா கமலநாதன்., (ப.ஆ) கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
2. கயல்விழி. மு., *சோழர் காலத் தமிழ்ச் சமுதாயம் மனுதர்மச் சமுதாயமா?*, தமிழ் பேராய்வு ஆய்விதழ், 2020 December, University of Malaya, Kuala Lumpur, Malaysia (https://doi.org/10.22452/JTP.vol9no2.6)
3. சிற்றம்பலம். சி.க. 1996, *ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம்: 1, கி.பி 500 வரை*, திருநெல்வேலி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
4. பத்மநாதன். சி. 2006. *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. வெல்லவுர் கோபால்., 2005. *மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்*, மனுவேதா பதிப்பகம், மட்டக்களப்பு.




படம் 01



சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கந்தளாய்ச் சாசனம்

படம் 02



படம் 03



படம் 04